சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 432/2015

**PW 1 தங்கவேல்** **17.11.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை வெளியூரில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். 2015 ல் 2 ம் பிரதிவாதி மணிகண்டன் வால்பாறை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 2015 வழக்கிற்கு பின்னர் தான் இந்த வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், அதற்கு முன்பு பைசல் பேசப்பட்டது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பைசல் பேசிய விவரத்தை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பைசல் பேசப்படவே இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் உரிமை கொண்டாடியது இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட 4 ம் பிரதிவாதிக்கு உரிய பங்கை கொடுக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. நான் எனது சொத்தில் உள்ள பங்கை விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றும், அதனால் 4 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1/4 பங்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் வழக்குரையில் சொல்லியவாறு நான் சொத்தை அனுபவம் செய்ததில்லை என்றும் அதனால் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 4 ம் பிரதிவாதிக்கு 1/4 பங்கு உள்ளது என்றும் அதனை நான் ஆட்சேபணை செய்ய முடியாது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி